# வரலாற்றிலேயே ஒரு புதிய கண்ணோட்டம்

இந் நூல்
தமிழ் மக்களின் சூழ்நிலையிலேயே
ஆராய்ச்சி செய்யப்பட்டது.



ஆக்கியோன்: சின்னப்பு; அமிர்தநாதன்

இளவேனில் வெளியீடு 4
பந்திஅடி, தெல்லிப்பழை

கடவுள் துணை

# முகவுரை

இவ்வாராய்ச்சி நூலை எழுதியவரின் இலட்சியம் பின்வருவனவற்றுள் அடங்கும்.

வாழ்க்கையின் இலட்சியம் மனித சமுதாயத்தின் வரலாற்று உண்மைகளை ஆராய்ச்சிக் கூர்ப்பு நிலையிலிருந்து நுணுகிநோக்கி உண்மைகளை எத்தகையதொரு பக்கமும் சாராது நடுநிலைமையிலிருந்து ஆராய்ந்து வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உண்மைச் சம்பவங்களை ஒரு முகப்படுத்தி அறிவு ஆராய்ச்சியை அனுபவவாயிலாகவும், நூல்களைக் கற்று நூல்களில் இல்லாத புதிய விடயங்களை ஆராய்வதும் வரலாற்று உண்மைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும்.

ஆராய்வு செய்த உண்மைகள் சரியானவைகளா? அன்றேல் பிழையானவைகளா? என்று ஆராய்ச்சி மனப்பான்மையைப் பெருக்கி அறிவுலகிற் சஞ்சரிக்கவேண்டும். இந்நூல் எமது சமுதாயத்தின் பண்பட்ட கருவூலங்களை மேம்படுத்துவதற்கும், முற்போக்கு எண்ணங்களை ஏற்படுத்துவதற்கும் மறைந்திருக்கும் பல உண்மைகளைத் தத்ரூபமாக எடுத்து எழுதியிருக்கிறேன். இத்தகையதொரு அரிய ஆராய்ச்சியின் பயனாகச் சரித்திரத்திலே ஒரு புதுமைக் கூற்றை உள்ளடக்கியுள்ளேன்.

யாழ்ப்பாண வைபவ மாலையில் இல்லாத ஒரு புதிய விடயமாகையினால் ஆசிரியர்களும் அறிவுடை நன்மக்களும் வரவேற்று என்னை ஊக்குவித்து இத்தகையதோர் நூல் வெளிவரவேண்டுமென்ற நோக்கிற்காக மனம் உவந்து பணம் தந்து உதவியதோடு நில்லாது ஆசீர்வதித்துப் பணி புரிந்தமைக்கு நன்றியும் கடப்பாடுமுடையவனாக் இருக்கின்றேன். இந்நூல் இரண்டு பகுதியினைக் கொண்டது. முதலாவது பகுதியைத் தற்பொழுது வெளியிட்டுள்ளேன். இதர பகுதியையும் வெகு விரைவில் வெளியிடுவேன் இந்நூலை அழகுற அச்சேற்றித்தந்த செட்டியார் அச்சகத்தார்க்கும் இங்கு அச்சேற்ற உதவி செய்த தொழிலாள அன்பர்க்கும்.

எனது இதயம் கலந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்

இப்படிக்கு
தங்கள் பணிவும் நம்பிக்கையுமுள்ள
எழுத்தாளன்
சி. அமிர்தநாதன்

# வரலாற்றிலேயே ஒரு புதிய கண்ணோட்டம்

வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டுப் பள்ளத்தாக்குகளில் பயிர்டு [illegible]ழிலை மேற்கொண்ட ஆதிக் குடிகள் பள்ளம் நாடி உழவுத் தொழிலைத் தாயகமாகக் கொண்டதினால் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் வேளாண்மை செய்வோரை உயர்குல உழவர் எனவும் வேறொரு பெயரால் பள்ளர் எனவும் பெயர் பெற்று அழைக்கப்பெற்றனர். பள்ளி என்பதின் கருத்து மாணவிகளுக்கு அறிவு புகட்டும் இடம் இவர்களுக்குப் பயிர் வேளாண்மையைப் பற்றிய அறிவும் வேறு அனுபவரீதியான அறிவும் இருப்பது மட்டுமன்று மனித சமுதாயத்துக்கு இவர்களின் அறிவு பயன்படுவதினாலும், இவர்கள்பாடினியர்கள் எனவும் பெயர் பெற்றனர். பள்ளு என்னும் நூலில் உழத்திப் பாட்டில் 2-362ம பக்கத்தில் அவர்களால் வியந்து பாடப்பெற்ற பாட்டுகள் உண்டு. பெண்பாலார் மாத்திரமன்று ஆண்பாலாரிலும் சிறந்த இசை வல்லுனரை இன்றும் காணலாம். பெண்பாலாரும் ஆண்பாலாரும் வயல் நிலங்களிலே ஆடிப்பாடிப் பயிர்வேளாண்மை செய்தமையினாலும் அத்தொழிலைப்பற்றிய அறிவும் ஆற்றலும், அனுபவமும் முதிர்ச்சி பெற்றிருப்பது மட்டுமல்லாது மனித சமுதாயத்துக்கு உணவில் தன்னிறைவு பெறுவதற்குக் கடுமையாக உழைக்கும் வர்க்கத்தினர். இவர்களுக்கு இறைமையைப்பற்றிய நம்பிக்கையும் பக்தியும் நிரம்பப் பெற்றிருக்கின்றனர். பள்ளர் மருதநிலங்தளில் கோவில்கள் கட்டி வழிபட்டு வந்தனர். கடவுள் நம்பிக்கையிலும் பழங்குடி மக்கள் ஆகையினால் இன்றும் கோவில்களில் பள்ளி அறையென்னும் ஓர் அறை இருப்பதைக் காணலாம் இவர்களின் பெயர்கள் தெய்வத் திருப்பெயர்களாகவே இருக்கின்றன. அப்பெயர்களை இங்கு தருவது சாலப் பொருத்தும் கந்தன் கணபதி, வள்ளி, முருகன், வேலவன் ஆகிய பெயர்களை உள்ளீடாக்கியுள்ளது.

அதிகாரபலம் வாய்ந்தவர்களின் ஆதிக்க வெறியினாலும், அவர்களின் காட்டுமிராண்டித் தனத்தினாலும், சுயநலக் கொள்கையை உட்புகுத்திப் பூமாதேவியை உழுது பண்படுத்திப் பயிர் ளோண்மை செய்வோரைக் குறைந்த குலத்தினராகக் கருதினர். உழவோர் பஞ்சமர்க்ள் என்றால் உழவுத் தொழிலினால் வரும் தாவர உணவு வகைகளை உண்போரையும் இழிந்தவர்களாகவன்றோ கருதவேண்டும்.

பிற்போக்கு எண்ணம் படைத்தவர்களின் தூண்டுதலால் கொலை, களவு, கொள்ளை, குடி, சூது ஆகிய கொடிய தொழில்களைப் பிறப்பிடமாகக் கொண்ட கள்ளர், மறவர், அகம்படியார் ஆகிய சமூகத்தினர் பூமாதேவியை உழுது பண்படுத்திப் பயிர் வேளாண்மை செய்



வோருக்கு எதிராகப் போராடி இவர்கள் வாழ்ந்த சுதந்திரக் கிராமங்களைத் தாக்கிக் கொலைசெய்து, கொள்ளை அடித்து இவர்களோடு சமர் புரிந்து இவர்களைத் துன்புறுத்தினர். இக் கொடுமைகளுக்கு உட்பட்டுத் தாங்கொணாத் துயரடைந்த உழவர் குலத்தில் பலர் வேறு பல தொழில்களில் தேர்ச்சியுற்றனர். இதனால் இன்றும் இவ்வினத்தவருள் பல்வேறு தொழில்கள் செய்வோரை நேரில் காணலாம். கட்டிடக் கலைஞர்களாகவும், தொழில் வல்லுனராகவும், சிற்பவல்லுனராகவும், ஓவியர்களாகவும், மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும். விவசாயிகளாகவும், இப்படிப்பல்வேறு தொழில் புரிபவர்களாகவும் காணப்படுகின்றனர். சில இடங்களில் பலமுற்றவர்களின் கிராமத்தில் புகுந்தோரை உழவர் குலம் போராடி வெற்றியீட்டிச் சிறப்புத் தொழிலையும் சுதந்திரக் கிராமங்களையும் சுதந்திரத்தின் அதன் மகத்துவத்தையும் காப்பாற்றினர். இவ்வாறான பல கிராமங்களின் பெயரையும் இங்கு தருவது சாலப் பொருந்தும். பண்டத்தெருப்பு, கம்பாமூலை. மணிக்கம்பித்தோட்டம், ஏழாலை, மயிலங்காடு, கோட்டைக்காடு, காங்கேசன்துறை, தெல்லிப்பழை ஆகிய இடங்களும் காப்பாற்றப்பட்ட இடங்களாகும். தெல்லிப்பள்ளி என்னும் இடமும் (தெல்லி+பள்ளி) என்பது அழகிய சிற்றூர் என்பதாகும்) இவ்வினத்தினரின் ஊராகும்.

வேறு பலர் தமது பண்பட்ட தொழிலை விடமுடியாமல் ஆக்கிரமிப்பாளர்களோடு சேர்ந்து அத்தொலிலை அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குக் கீழ்செய்து வந்தனர்.

மேலும் ஆராய்ச்சிக்குரிய விடயங்கள் யாதெனில் தற்பொழுது எமது இந்து ஆலயங்களில் இறைவழிபாட்டிற்கு மூலகர்த்தாக்களாகப் பூசைசெயும் பிராமணர் போராட்ட விடயங்களில் ஈடுபடவில்லை. அவர்கள் பண்பட்ட உள்ளம் உடையவர்கள். அவர்கள் எவ்வுயிர்க்கும் தீங்கு பயக்காத அறத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். அவர்களும் உழைப்புக்கு முழகியத்துவம் கொடுத்தமையினால்தான் அவர்களும் சம்பளத்துக்குப் பூசைசெய்கின்றனர். அதிகார வர்க்கத்தினர்தான் அடிமைத்தாபனம் எழுதி வைத்தனரேஒழிய அவர்களின் பண்பட்ட கருவூலத்தில் அமையப்பெறவில்லை. இந்துசமயத்தத்துவம் உயர்ந்த குறிக்கோளைக்கொண்டிருக்கின்ற படியினால்தான் சிவபெருமான் பிட்டிற்கு மண் சுமந்த படலத்தில் தொழிற் சமத்துவத்தைப் பேணிக் காப்பதிலும் ஆணுவமலத்தை அடியோடு போக்குவதற்கும் எழுதப்பட்ட படலமாகும். பிராமணர்களும் ஒழுங்குவழிவந்த செம்மை[illegible] தவர்கள். ஆகையினால் அவர்களின் வாழ்வில் உத்சம [illegible] கடைப்பிடித்து தூயமனம் உள்ளவர்களாக வாழ்கின்றனர். நாட்டாண்மைக்காரர்கள் பள்ளர்களின் விவசாயப் பயிர்ச்செய்கைகளைத் தடுத்து

நிறுத்துவதற்காக வெள்ளங்களைத் தடுத்து நிறுத்தி அவர்களைக் கிணறுகளிலும், குளங்களிலும் நீர்ப்பாய்ச்சக்கூடாது எனத் தடுத்து நிறுத்தினர். இன்றும் பல இடங்களில் இச்சம்பிரதாயத்தைக் காணலாம். வேளாண்மை செய்தமையினால் வெள்ளாளர் எனப் பெயர் சூட்டப்பட்டால் பள்ளரும் வேளாண்மை செய்பவர்கள்தானே ஆனால் அவர்களை ஏன் வெள்ளாளர் என அழைக்கவில்லை? இவ்வரிய ஆராய்ச்சியின் பயனாக் ஓர் உண்மை புலப்படுகின்றது. வெள்ளத்தைப் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்ச விடாது வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய காரணத்தினால் வெள்ளத்தை ஆண்டமையினால் வெள்ளாளர் ஆகினர். பின்பு பயிர் வேளாண்மையை மேற்கொண்டு வருகையில், வெள்ளாளர் என்னும் காரணப் பெயர் மாற்றமடைந்துள் மறைந்து ஆதிக் காலப் போக்கில் அச்சொல் மருவி வேளாளர் ஆகினர்.

சிறை என்பதின் கருத்து என்ன? ஓர் இன மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து தங்களது நாகரிகத்தையும், பண்பாட்டையும் கடைப்பிடித்து ஒரு சுற்றுவட்டத்தில் வாழ்வு நடாத்தும்போது அறமற்ற தொழிலைப் பிறப்பிடமாகக் கொண்டு மனித நீதிக் கொவ்வாது மனிததர்மத்தை மீறிய அறிவிலிகள் அக்கிராமத்தினரைக் காடைத்தனத்தினால் அடங்காப் பிடாரிகளாய்ச் சண்டித்தனம் செய்து சுதந்திரமக்களின் உரிமையைப் பறித்து அடக்கி ஆண்டு சர்வாதிகாரிகளாக மாறியது மட்டுமன்றி மனித சுதந்திரங்களை வழங்காது உரிமைகளைப் பறித்தலே சிறை எனப்பட்டது.

இவ்வாறு பல்வேறு சம்பவங்களைச் செயல்படுத்தி இவ்வினத்தினரை இழிந்தவர்களாக்க முயன்றனர். இவர்களின் உழைப்பை உறிஞ்சி ஏப்பமிட்டனர். இன்றும் அத்தொழிலுக்கு உரிமையுடையோரான வேழிர் குலத்தைக் கொண்டே சித்திரை மாதத்தில் அவர்கள் இல்லாது வேளாளர் உழவுத் தொழிலைச் செய்யமாட்டார்கள். பள்ளர் பாலுக்கும் பழத்துக்கும் உரியவர்கள் என்றும் ஊர்கள் தோறும் கூறப்பட்டுவரும் நாட்டுப் புறப்பழமொழியைக் கொண்டு அவர்கள் பண்பட்ட செம்மை வாய்ந்தவர்களென அவர்களின் உணவு வகைகளைக் கொண்டும் ஊகித்து அறியலாம்.

கள்ளர் மறவர் கனத்ததோர் அகம்படியார் மெள்ள மெள்ள வந்து வெள்ளாளர் ஆகினர் என்று இப்பண்டைய பழமொழியை ஊகித்து அறிவதன்மூலம் இரண்டு உண்மைகள் பொதிந்திருப்பதை அறியலாம். பண்டைய பழமொழியிலும் வெள்ளாளர் என்று இருப்பதைப் பார்க்கலாம். இப்பழமொழியில் வேளாளர் என்று இடம் பெறுததினால் முன்பு கூறிய கோட்பாடு சரியானது என்பதை அறிந்து கொள்ளலாம். உண்மையிலேயே அவர்கள் ஆதிமனிதனின் குணதிசயங்



களிலிருந்து செம்மைப்பட்டு முன்னேறிய இனத்தினர் என்பதை இப் பழமொழி படம்பிடித்துக் காட்டுகின்றது. அன்றைய தமிழர் சமுதாயத்தில் முன்வந்த இன்றைய இனத்தினர் தாம் மறக்குடி மக்களென்றும் ''ஆண்டபரம்பரை மீண்டுமொருமுறை ஆளநினைப்பதில் தவறொன்றுமில்லை'' என்றும், கூறிவருகின்றனர். இக்கூற்றுக்களிலிருந்து, இவர்கள் போராடியே முன் வந்தவர்கள் என்பதையும் அறியக் கூடியதாக இருக்கின்றது. மனிதனை மனிதன் ஆளுவதினால் அடிமை ஆட்சி முறையே நிலவும் மனிதன் மனிதனோடு சகோதரத்துவ நிலையில், சமத்துவநிலையில் ஆன்மீக சுத்தத்தோடு வாழ்ந்து வந்தால் எமது வாழ்வு பொலிவுறும். வெள்ளாளர்களிடையேயும் மிகவும் உயர்ந்த புலாலுண்ணாத செம்மை வாய்ந்த இனத்தினரும் வாழ்கின்றனர். இவ்வினத்தினருள்ளும் அன்பே சிவமென்னும் இலக்கை அடிப்படையாகக் கொண்டும், இனிது வாழ்கின்றார்கள்.

பள்ளர் உணவு வகைகளிலும் சிறந் தாவர போசாக்கு நிறைந்த உணவு வகைகளையே உண்டனர் எனவும் அறியலாம். உளவலிமை, உடல்வலிமை ஆத்மீகப் பண்பு, பண்புள்ளம் ஆகியவைகளைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தைப்பூசம், தைப்பொங்கல் ஆகியவைகளும் உழவர்களுடையதே, இத்தொழிலின் சிறப்புவாய்ந்தோர் எல்லா மக்களுக்கும் தன்னலமற்ற சேவையைச் செய்து விவசாயத்தின் மூலம் தாவர உணவு வகைகளைப் பெற்று விருந்தோம்பும் பண்டைய பண்பை அடிப்படையாகக் கொண்டவர்கள்.

மேலும் ப வரியிலுள்ள சில சொற்களை எடுப்போமானால் அச்சொற்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதையும் அச்சொற்களின் இனத்தவர்களையும் காணலாம், பள்ளர், பண்டாரிகள், பார்ப்பனர் பிள்ளைமார், பிராமணர், ஆகிய ஐந்து இனத்தினரும் ஓர் இனத்திலிருந்து தோன்றியவர்களே. ஆகையினால் இவர்கள் ஓர்இனத்தினரே இவ்வைந்து இனத்தினரும் மிகுந்த பயந்த சுபாபம் உடையவர்கள்.

பிராமணர் என்போர் பிரமாணங்களுக்கு அமைய விருப்பு வெறுப்பின்றிப் பிரமத்தை அடைந்து இறைவனுடைய பாதார வித்தங்களுக்குத் தூய மலர் தூவிப் பீடத்தில் பூவைத்துப் பூசை செய்பவர்கள். இதனாலன்றோ இவர்களைப் பிராமணர் என்று அழைத்தனர். பார்ப்பனர் என்போர் ஒவ்வொருவருடைய வெளித் தோற்றத்தைப் பார்த்து உளநோக்கைப் புரிந்து கொள்பவர்கள் இதனால்தான் இவர்கள் பார்ப்பனர் எனப் பெயர்பெற்றனர். இவர்கள் சில இடங்கிளில் மனநோயாளருக்கு அஞ்சனம் பார்த்துச் சிகிச்சை செய்பவர்கள். குழந்தையினுடைய உள்ளத்தைப்போன்ற இரக்கமுடையவர்கள். குழந்தையினுடைய உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டமையினால் ள்ளை மாதிரியானவர்கள். இதனால்தான் பிள்ளைமார் எனப்பட்டனர்.

பலவிதமான அலங்காரப் பொருட்களைச் செய்து அப்பொருட்களினால் கோவில்களிலும் மங்களகரமான வைபவங்களிலும், பல அலங்கார வேலைகளைச் செய்பவர்கள் மாத்திரமன்று பூமாலை புனைந்து பாமாலை பாடிய பண்டய அரியவர்கள். காலப்போக்கில் இச்சொல் திரிந்து பண்டாரிகள் ஆகினர். உளம் பண்படப் பண்படப் வளர்ச்சியுற்றுப் பண்பட்டனர்.

தமிழ் மொழியில் அம்மா, அப்பா, என அழைக்கப்படும் சொற்கள் பாபி மொழிச் சொல்லே. இன்றும் தேவாரங்களில் அம்மை, அப்பன் என்றும், பெண்தெய்வத்தைக் கோவில்களில் அம்மன் என்றும் அழைக்கின்றனர். அம்மன் ஆலயங்களில் தொன்றுதொட்டு இறைவழிபாடு நடாத்துபவர்கள். தமிழர் சமுதாயத்தில் முன்வந்த முன்னோடி இனத்தினர். அவர்கள் அறத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். இவர்கள் அழகிய குளிர்ந்த அருளையுடையவரான பக்குவ நிலையை அடைந்ததினால் அழகிய குளிர்ந்த அருளையுடையவரான அந்தணர் எனப்பட்டனர். பிராமணரும் பண்பட்ட கருவூலத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயர்ந்த இனத்தினர். ஆரியருள் பண்பட்ட இனத்தினரும் திராவிடரிலும் பண்பட்ட இனத்தினரும் ஒன்று சேர்ந்து இந்து சமயக் கோவில்களில் இறைவழிபாடு நடாத்தி வருகின்றனர். இரு இனத்தினரும் பல இடங்களில் ஒன்று சேர்ந்துவிட்டனர். சிற்சில இடங்களிலுள்ள கோவில்களில் தனித்து நின்றும் செம்மை வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

மானியமுறைச் சமுதாய அமைப்பிலே மன்னர்கள் யானையில் பவனி வரும்போது அவர்களுக்கு முன்பு சென்று தாளத்தோடு வீர முழக்கம் எய்திப் பறை அறிவிக்கும் காரணத்தால் பறையர் எனப்பட்டனர். இவர்களில் சகிப்புத் தன்மையுடையவர்கள் தன்னலமற்ற சேவையைச் செய்பவர்கள். இவர்களுக்கும் வயித்தியம் மிகவும் சிறந்த தொழில் இன்றும் இவர்களில் பாம்புகடிவைத்தியர், ஆயுள்வேத வைத்தியர், சித்த வைத்தியர் ஆகியவர்களை இன்றும் காணலாம்.

வன்னியர்கள் எனப்படுவோரும் பள்ளரே. நாட்டுப் புறங்களிலிருந்து குடி பெயர்ந்து காடும் காடு சார்ந்த இடங்களில் காடுகளைத் திருத்திப் பயிர் வேளாண்மை செய்தமையினால் வன்னிநாட்டார்கள் என அழைக்கப்பட்டனர். இலங்கையின் கடைசி மன்னனான பண்டார வன்னியனும் பள்ளர்களின் இனத்தவனே. செம்மைப்பட்டு உயர்நிலைஅடைந்து வந்த மனிதன் நிலத்தைப் பண்படுத்திவேளாண்மை செய்யும் பொழுது மிருகங்களின் ஊனை உண்ணவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இதனால் இவன் ஆதிமனிதனின் குணாதிசயங்களிலிருந்து விடுதலை அடைகின்றான். தாவர உணவுவகைகளை உண்போனுக்குப்



பண்பட்ட உடல் வளர்ச்சி ஆகியவைகள் ஏற்படுகின்றன. கொல்லாமையாகிய அறவிரதத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியமேற்பட்டதால் அறச்சார்புடையவராகக் கருதப்படுகின்றனர்.

கம்பரும் ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது பயிர்த்தொழில் ஏர் எழுபது என்னும் நூலில் கம்பர் வேளாண்மையின் சிறப்பினை எடுத்துரைத்தார். உழவர் குலவரலாற்றிலேயே மிகவும் உன்னதமான வெற்றித்திருநாள் தைப்பொங்கல் தினத்தை உள் வைத்து ஆண்டனர். உழவோர் மிகவும் உழவுத் தொழிலில் சிறந்தவர்கள் மாத்திரமன்று உளவியல் பண்பிலும் தலைசிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். வாழ்வின் வெற்றித் தினமாகக் குறிக்கப்படும் உழவர் குலத்தின் மேன்மையுற்ற அத்தொழிலுக்கு மகத்துவம் கொடுப்பதன் பொருட்டே தைப்பொங்கலை விழாக்கோலமாக இந்து சமயத்தினர் விழா எடுத்து மகிழ்விக்கின்றனர்.

நீண்டகாலமாகப் பனைவளம் நிறைந்த நாடாகப் பாண்டிநாடு திகழ்ந்தது. சுற்றுவட்டத்திற்கும் நெடுநாளைய ஆராய்ச்சிக்குப் பின்னரும் பனையிலிருந்து பதனீரையும் எடுத்தது மட்டுமன்றிக் கரும்பு ஆலைகள் இல்லாக்கால முதல் பனை வெல்லம் ஆகியவற்றை ஆக்கினர். அவர்கள் ஒரு குறைந்த குலத்தினராக இருந்திருப்பின் ஆடிப் பிறப்பிலே அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பனங்கட்டியைக் கொழுக்கட்டைக்குப் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் செய்யப்படும் உணவுப் பொருட்களாகவே இன்றும் காணப்படுகின்றது. சீனித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கற்கண்டைவிட மிகவும் விசேடம் வாய்ந்த கல்லாக் காரத்தை ஓர் இயந்திரத்தின் உதவியின்றித் தமது ஆராய்ச்சியினால் உண்டாக்கினர். என்றால் இவர்களின் ஆராய்ச்சிதான் என்னே!

பனை மரத்தில் ஏறிப் பயன் பாட்டை எடுக்கும் இனத்தினர் பள்ள இனத்தினர் மாத்திரமன்று வேறு பல இனத்தினரும் பனையின் பயன்பாட்டை எடுக்கின்றனர். ஆகையால் பொருளியல் நோக்கோடும் வேறுபல இனத்தினரும் பனையின் பயன்பாட்டை எடுக்கின்றனர். ஆகையினால் பொருளியல் நோக்கோடும் வேறு பல இனத்தினரும இத்தகைய தொழில்களைச் செய்து வருகின்றனர். விவசாயம் செய்பவர்களுக்கு நீண்ட ஓய்வு நேரம் இருந்தமையினாலும் இவர்கள் நெடுநாளைய ஆராய்ச்சிக்குப் பின்னர் பனைத்தொழிலைச் செய்திருக்கின்றனர். வேறு யாரிடமும இருந்து பனையின் பயன்பாடுகளை எடுப்பதற்கு இவர்கள் கற்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஆராயுங்கால் அவர்களுடைய கல்வெட்டுக்களும், ஊர்களின் பெயரைக் கொண்டும் பழையகாசு ஆராய்ச்சியைக் கொண்டும்,

ஆராய்ந்து இவ்வாராய்ச்சியினை மேற்கொண்டால் இன்னும் எவ்வளவோ உண்மைகள் தெட்டெனப் புலப்படும்.

தச்சர், கொல்லர், தட்டார், கற்சிப்பர், கன்னார் ஆகிய ஐந்து இனத்தினரையும் பஞ்சகம்மாளம் என அழைத்தனர். இவ்வைந்து இனத்தவரும் ஓர் இனத்தவரே, இவ்வைந்து இனத்தினரும் உலக வரலாற்றிலேயே, வெளிப்புற நாகரிகச் சின்னங்களை ஏற்படுத்தி உற்பத்திக்கு ஏதுவான கருவிகளுக்கும் மூலகர்த்தாக்கள். சிறந்த கலைஞர்கள், விஞ்ஞான மேதைகள். இவ்வைந்து இனத்தினரும் இல்லாவிட்டால் உலக சமுதாயமே முன்னேறி நாகரிகமடைந்திருக்கமுடியாது.

முற்காலத்தில் தொழிலில் தேர்ச்சியுற்று ஒவ்வொரு ஒவ்வொரு தொழில்களிலும் விசேட விற்பன்னர் ஆவதற்கும் அத்தகைய தொரு தொழில்களில் ஒருவர்க்கொருவர் உதவியாகவும் ஒரு தொழிலுக்கு ஒரு தொழில் நெருங்கிய தொடர்புடையதாகவும் இருந்தமையினால் பண்டைக்காலமுதல் ஐவ்வைந்து இனத்தினராகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். பஞ்சமர் என்பதின் கருத்துக் குறைந்த இனத்தினர் என்ற கருத்தல்ல, ஐந்து இனத்தினர் என்ற கருத்துத்தான் பொருள் வேறுபாட்டாலும் அறியாமையினாலும் சிந்தனையின் ஆற்றல் ஒளி பெருமையினாலும், உள்ளம் பண்படாமையினாலும், மனிதனுக்கு முரண்பட்டு உள்ளுணர்வில் இன்பம் காணாது தவிக்கின்றான்.

ஆகையினால் தமிழர் சமுதாயத்தின் பண்பட்ட உள்ளமுடையவர்கள் ஒன்று சேர்ந்து முற்போக்கு எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுத்து பொருளியல், சமத்துவத்தையும், அரசியல் சுதந்திரத்தையும், தொழில்களுக்கு மகத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கு முற்போக்குச் சக்திகள் ஒன்றிணைந்து செயல்படவேண்டும்.

சர்வதேச ரீதியில் மனிதத்தன்மையுடனும், ஆத்மீக உள்ளுணர்வுடனும். செயல்பட்டால் நாளைய சமுதாயத்துக்கு நாம் செய்யும் இன்றைய அரிய தொண்டாகும். இந்நூல் எவர் மீதும் துவேச உணர்வினை ஏற்படுத்துவதற்கோ, அல்லது பிரிவினை கோரியோ எழுதப்படவில்லை. முற்போக்கு எண்ணம் படைத்த நல்ல உள்ளங்களை ஒன்றிணைப்பதற்கே இக்கட்டுரையை எழுதியுள்ளேன். ஆராய்ச்சிக்குஉரிய விடயமாகையால்ஒவ்வொன்றாகஅலசிஆராய்ந்துபுதியகண்டுபிடிப்புக்களைஆதாரத்தோடு கண்டுபிடித்து பல உண்மைகளை எடுத்து எழுதியிருக்கின்றேன். முற்போக்கு இளைஞர்களும் அறிஞர்களும் மதகுருமாரும் இத்தகையதொரு நூலை ஆராய்ச்சிக் கூர்ப்பு நிலையிலிருந்து, ஆராய்ந்து இக்கட்டுரை நூலினைக் கற்றுப்பயன் பெறுவதோடன்றி அடுத்து ஆராய்ச்சி நூலினையும் வரவேற்று ஆசீர்வதித்து இன் நன்முயற்சிக்கு வித்திடுவார்களென நம்புகின்றேன்.

வணக்கம்.

வரலாற்றிலேயே ஒரு புதிய கண்ணோட்டம் என்னும் நூலின் இரண்டாம் பகுதி பின்வருவனவற்றுள் அடங்கும் அவையாவன:

தமிழன் எங்கே தோன்றினன்? தமிழர்களின் பழம் பெரும் சமயம் என்ன? தமிழர்களின் வழித்தோன்றலாகிய மூதாதையர் யார் யார்? தமிழ் மொழி என்று ஏன் பெயர் பெற்றது? இவற்றைப் போன்ற பல உண்மைகளை ஆராய்ச்சி செய்து புதிய விடயங்களைக் கூறும் நூல்.

எமது தமிழ்மக்களின் அறிவு ஆராய்ச்சியைப் பெருக்குவதற்கும் ஓர் உயர்ந்த இனத்தின் வரலாற்றை அறிவதற்கும் உயர்ந்த பண்பாட்டு வளர்ச்சியினை வளர்ப்பதற்கும் உருவானதே இந்நூலின் விளக்கமாகும்.

எமது பைந்தமிழ் அன்னையின் மறுமலர்ச்சிக்காகவே
இந் நூலை வெளியிட்டுள்ளேன்.

10-4-78ல் வெளியாகியது.

பதிவு உரிமையுடையது.